# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, யூலை மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

*ச.வ. கூட். 32/2007*

## இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

*"இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத் தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக் கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன், சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல் வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகர மாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கான தாதலாலும் :*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை கட்டமைப்புசார் பொறியியலாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கை கட்டமைப்புசார் பொறியியலாளர் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கட்டமைப்புசார் பொறியியலாளர் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக இருக்கும் அல்லது இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கைக் கட்டமைப்புசார் பொறியிலாளர் சங்கம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டி

ணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். மேலும் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) கட்டிடங்கள், பாலங்கள், கோபுரங்கள், அத்திவாரங்கள் மற்றும் விளையாட்டரங்கங்கள் என்பன போன்ற குறித்துரைக்கப்பட்ட துறைகளில் கட்டமைப்புசார் பொறியியல் விஞ்ஞானத்தையும் தொழில் முறையையும் ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும் ;

(ஆ) கட்டமைப்புசார் பொறியியல் தொடர்பில் கருத்தரங்குகள், விரிவுரைகள், பொருட்காட்சிகள், ஆய்வரங்குகள், கருத்துப்பரிமாற்றங்கள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும் ஏற்பாடுசெய்தலும் ;

(இ) கட்டமைப்புசார் பொறியியல் பற்றிய நூலகங்களைப் பேணுதலும் கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிடுதலும் ;

(ஈ) கட்டமைப்புசார் பொறியியலில் உயர்தொழில்சார் அறிவை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தல் ;

(உ) கட்டமைப்புசார் பொறியியலாளர்க்கான உறுப்பினர்களின் தகைமைக்குத் தோதான நியமங்களை வகுத்தலும் பரீட்சைகளையும் நேர்முகப் பரீட்சைகளையும் நடாத்துதலும் மற்றும் கட்டமைப்புச்சார் பொறியியல் தொடர்பில் சான்றிதழ்கள் வழங்குதலும் ;

(ஊ) உறுப்பினர்களின் உயர்தொழில்சார் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டமைப்புசார் பொறியியலாளர்களின் உயர்தொழில்சார் நடத்தையின் நியமத்தைப் பேணுதலில் அவர்களுக்கு உதவிசெய்தலும் ;

(எ) கட்டமைப்புசார் பொறியியல் பற்றிய பிணக்குகளை நடுத்தீர்ப்பின்மூலம் தீர்த்து வைத்தலில் ஊக்கமளித்தலும் உதவிபுரிதலும் மற்றும் நடுத்தீர்ப்பாளர்களைப் பெயர் குறித்து நியமத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கான பணத்தை பொருத்தமானதெனக் கூட்டுத்தாபனம் கருதக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப் பின்மீதும் முற்பணமாகப் பெறுதல், கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் ;

(ஆ) மாற்றுண்டியல்களை, காசோலைகளை, வாக்குறுதிப் பத்திரங்களை அத்துடன் வேறு கைமாறத்தகு சாதனங்களை வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், தள்ளுபடி செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாறிக் கொடுத்தலும், கொள்வனவு செய்தலும், விற்றலும், வழங்குதலும் அத்துடன் இலங்கையிலும் வேறிடங்களிலும் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தலும் செயற்படுத்துதலும் பேணுதலும் மூடிவிடுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களை இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுடன் அல்லது ஏதேனும் ஆட்கள் குழுவுடன் செய்து கொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றுள் எதனையும் நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமலோ எய்துவதற்கு உசித மாகக்கூடியவாறான எவையேனும் நம்பிக்கைப் பொறுப்புகளை பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளு தலும், நிறைவேற்றுதலும் புரிதலும் அத்துடன் நிர்வகித் தலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு உடனடியாகத் தேவைப்படாத கூட்டுத் தாபனத்தின் எல்லாப் பணங்களையும் இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களில் அல்லது வேறேதும் வகையில் முதலீடு செய்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர் களையும் நியமனம் செய்வதற்கு, தொழிலில் ஈடுபடுத்து வதற்கு, பதவி விலக்குவதற்கு மற்றும் சேவையை முடிவு றுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழு வினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, அவர்களுக்கு அத்தகைய சம்பளங்கள், படிகள், ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகளைச் செலுத்துவதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு இணையான குறிக்கோள்களைக் கொண்ட ஏதேனும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு வேறேதேனும் அமைப்புகளுடனும் கழகங்களுடனும் இணைவதற்கும் ;

(ஏ) உபகுழுக்களை நியமித்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவமும் கட்டுப்பாடும் நிர்வாகமும் இச்சட்டத்தினதும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய நிறைவேற்றுக்குழுவொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் சங்கத்தின் உறுப்பினர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க பதவிதாங்குநர்கள் தெரிவுசெய்யப் படும்வரை முதலாவது நிறைவேற்றுக்குழுவின் பதவிதாங்குநர் களாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அல்லது ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மையுடன் பின்வரும் எல்லாவிடயங்களுக்கும் அல்லது அவற்றுள் எதற்கும் காலத்துக்குக்காலம் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களின் தகுதி, தகைமைகள், அவர்களைச் சேர்த்துக்கொள்ளல், உறுப்பாண்மையின் வகுப்பாக்கம், உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், உறுப்பாண்மையை ஒழித்தல், அகற்றுதல் அல்லது பதவி துறத்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்களாக அதினின்று பதவி துறத்தல், பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் நிறைவேற்றுக் குழுவினது தத்துவங்கள், கடமைகள் அத்துடன் நடத்தை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு வேலையாளர்களினதும் நியமனம், பதவி நீக்கம், தத்துவங்கள், கடமைகள், பணிகள் அத்துடன் நடத்தை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழுவின் அல்லது அதன் ஏதேனும் ஒழுக்காற்றுக்குழுவின் கூட்டங்களில் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அக்கூட்டங்களை அழைத்தல், கூட்டுதல், வெற்றிடங்களை நிரப்புதல், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல், கூட்டங்களின் நிகழ்ச்சிநிரல், அவற்றிற்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அவற்றில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(உ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவத்திற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தலும் அத்துடன் முகாமை செய்தலும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதிகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் மாற்றப் படலாம் அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம், திருத்தப் படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*சிறப்புப் பட்டங்களைப் பயன்படுத்துதல்.*

**7**. (1) சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்கீழ், தகைமை பெற்றுள்ளவரான சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் ஓர் உறுப்பினர் என்பதனைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயரின்பின்னால் "எம்.எஸ்.எஸ்.ஈ. (எஸ்.எல்.)" என்னும் பதவிப் பெயரின் சுருக்க வாசகத்தைப் பயன்படுத்தும் உரிமையுடையவராதல் வேண்டும்.

(2) இணை உறுப்பினர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளவரான சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் ஓர் இணை உறுப்பினர் என்பதனைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயரின் பின்னால் "எவ்.எஸ்.எஸ்.ஈ. (எஸ்.எல்.)" என்னும் பதவிப் பெயரின் சுருக்க வாசகத்தைப் பயன்படுத்தும் உரிமையுடையவராதல் வேண்டும்.

(3) கௌரவ இணையுறுப்பினரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளவரான சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் ஒரு கௌரவ உறுப்பினர் என்பதனைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயரின் பின்னால் "கௌ. எவ்.எஸ்.எஸ்.ஈ. (எஸ்.எல்.)" என்னும் பதவிப் பெயரின் வாசகத்தைப் பயன்படுத்தும் உரிமையுடையவராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதி விருப்பாவண அளிப்பு, உரித்துமாற்றம், நன்கொடை அல்லது உதவுதொகையாகப் பெறப்பட்ட பணங்கள் யாவும் கூட்டுத்தாபனத்தின்

நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட செலவினம் யாவையும் கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**9**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, கொடை, மானியக்கொடை, இறுதிவிருப்பாவண அளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் இயலுமாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களது பொறுப்பின் வரையறை.

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புகளையும் செலுத்தித்தீர்க்கும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு அவரால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஆண்டு ஒப்பப் பணத்தின் தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கழகத்தால் செலுத்தப் படவுள்ள தனிசுகளும் கழகத்திற்குச் செலுத்தப் படவுள்ள தனிசுகளும்.

**11**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாம் கழகத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளாகவும் பொறுப்புகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் வேண்டும். அத்துடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்கள் உதவுதொகைகள் ஆகியனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் செலுத்தித்தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக் கோள்களை உடையதும் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர் களிடையே ஏதேனும் வருமானம் அல்லது ஆதனம் பகிர்ந்தளிக்கப் படுவதினின்று தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத்திற்கு அல்லது எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்த கைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள், கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அல்லது அதற்கு முன்னர் கூட்டுத் தாபனத்தின் நிறைவேற்றுக்குழுவால் தீர்மானிக்கப்படலாம்.

எவரேனும் ஆளினால் உறப்பட்ட செலவுகள் கூட்டுத் தாபனத்தின் பணத்தால் செலுத்தப்படுதல்.

**13.** இச்சட்டத்தின்கீழ் அல்லது கூட்டுத்தாபனத்தின் பணிப்பின் மீது எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர் பில் அவருக்கெதிராகத் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படு தல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

**14.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் குறைந்தபட்சம் ஒவ்வோராண்டிலும் ஒரு முறையாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் பரிசீலனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்குத் "தகைமை பெற்ற கணக்காய் வாளர்கள்" என்பது -

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதற்கு கணக்காளர்

ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான தனியார் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைபுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**15**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை நிறைவேற்றுக்குழுவால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தன்மையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்கள் தங்கள் பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனுமாள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின் தனிவேறான தாதல் வேண்டும்.

*ஒழுக்காற்றுக் குழுக்கள்.*

**16**. ஒழுக்காற்றுக் குழுக்களை நியமிப்பதற்கும் அத்துடன் உயர்தொழில்சார் நியமங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும் அவசியமான அத்தகைய வேறு நடவடிக்கைகளை காலத்துக்குக் காலம் எடுப்பதற்கு கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*